நிலப் போக்குவரத்து பரிசீலனை




நமது நிலப் போக்குவரத்து பரிசீலனையின் இலக்கு என்ன?
வாழ்வுக்குகந்த நகரை உறுதிப் படுத்துவது.
இதை நாம் எப்படி நிறைவேற்றப் போகிறோம்?
பொது போக்குவரத்தை உங்களது இன்னொரு காராக உருவாக்கிடத்தான்.

நமது நாடும் மக்கள் தொகையும் வளர்ச்சி அடைந்தாலும் நாம் வாழ்வுக்குகந்த நகரமாகத் திகழ்வதை உறுதிப்படுத்துவதே நமது நிலப் போக்குவரத்து இலக்கு.

எதிர்வரும் 2020ம் ஆண்டுக்குள், அன்றாடப் பயணங்களின் எண்ணிக்கை 60% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது அன்றாடம் செய்யப்படும் 8.9 மில்லியன் பயணங்களை 14.3 மில்லியன் பயணங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஏற்கனவே நம் நகரம் உலகிலேயே நெருக்கமான மக்கள் தொகை கொண்ட இரண்டாவது நகரமாக இருக்கிறது.

இது தொடர்ந்து செழிப்படைகையில், இன்னும் அதிகமானோர் வாழவும், வேலை செய்யவும், பொழுதைக் கழிக்கவும் இங்கு வருவார்கள்.

அதனால்தான் பொது போக்குவரத்தில் நாம் பெரும் மேம்பாடுகளைச் செய்ய வேண்டும். சாலைகளில் நெரிசல் ஏற்படாமல் உறுதிப்படுத்த வேண்டும். நடையர்கள், சைக்கிளோட்டிகள், முதியோர், உடற்குறையுள்ளோர், வறியோர் உட்பட அனைவரின் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும்.


நீங்கள் உயர்தர வாழ்க்கைச் சூழலை அனுபவிக்க இவையனைத்தையும் நாங்கள் செய்வது முக்கியம்.






நமது சாலைகளின் போக்குவரத்து தங்குதடையின்றி இருப்பதை உறுதிப்படுத்தவும், நமது பொது போக்குவரத்து முறையை மேம்படுத்தவும் நமக்குத் தீர்வுகள் தேவை – ஒருவகை போக்குவரத்துக்கு மட்டுமல்லாது பேருந்துகள், ரயில்கள், கார்கள் அனைத்து வகை போக்குவரத்துகளுக்கும்.

எனவே நீங்கள் பேருந்தில், ரயிலில் அல்லது காரில் பயணம் செய்தாலும், இந்த முயற்சிகள் உங்களுக்குப் பலனளிக்கும்.





## நீங்கள் பேருந்தைப் பயன்படுத்தினால்

வெளியில் எங்காவது செல்லும் எண்ணமா?

உங்கள் வீட்டில் இருந்து நீங்கள் வெளியே செல்ல அடியெடுத்து வைத்தது முதல், பேருந்தில் ஏறி, செல்ல வேண்டிய இடத்தில் இறங்கும்வரை உங்களை நாங்கள் நினைத்திருப்போம்.

உங்கள் பேருந்து பயணம் துரிதமாகவும், சரளமாகவும், மேலும் இனிமையாகவும் அமைய நாங்கள் செய்பவை இவை.




## குறைவான நேரம் காத்திருத்தல்

பேருந்து பயண வழிகளைத் திட்டமிடும் பொறுப்பை பேருந்து நிறுவனங்களிடமிருந்து நாங்கள் ஏற்போம். உங்களுக்கு மிகவும் வசதியானது எது என்பதன் அடிப்படையில் பேருந்து பயண வழிகளைத் திட்டமிடுவது இதன் நோக்கம்.

இதன்வழி பேருந்துகள் துரிதமாகவும் சுலபமாகவும் ரயில்களுடன் நிலையங்களில் இணையும். மேலும் பேருந்து மற்றும் ரயில் நேர அட்டவணைகளின் ஒருங்கிணைப்பால் காத்திருக்கும் நேரமும் குறையும்.

2009 ஆகஸ்ட் முதல், உச்ச நேரங்களில், 5 பேருந்துகளில் குறைந்தது 4 பேருந்துகள் ஒவ்வொரு 10 நிமிடங்கள் அல்லது அதைவிட குறைந்த இடைவெளியில் சேவையாற்றும். தற்போது நிலவும் இடைவெளி 15 நிமிடங்கள்.

நேரடியான, அடிக்கடி சேவையாற்றும் உள் பேருந்து சேவைகளும் அதிகரிக்கும். இதனால் எம்ஆர்டி, பேருந்து நிலையங்களுக்குக் குறைவான நேரத்தில் நீங்கள் சென்றடையலாம்.

மின்னியல் சாலைக் கட்டணம் விதிக்கப்படும் சாலைகளில், உச்ச நேரங்களில் பேருந்துகள் அடிக்கடி வருவதை நாங்கள் உறுதிப்படுத்துவோம் – 2008 ஜூன் மாதத்திற்குள் தற்போதைய 15 நிமிடங்கள் 12 நிமிடங்களாகவும் மற்றும் 2009 ஆகஸ்ட் மாதத்திற்குள் 10 நிமிடங்களாகவும் குறையும்.






## சேவை மாற்றத்திற்கு அபராதம் கிடையாது

2008 கடைசிக்குள், அடிப்படை பேருந்து மற்றும் ரயில் சேவைகளைப் பயன்படுத்தக்கூடிய பருவகால அட்டையை நாங்கள் அறிமுகப்படுத்துவோம். நமது பேருந்து, ரயில் சேவைகளை எந்த ஒரு நிறுவனம் ஏற்று நடத்தினாலும், ஒரே அட்டையைப் பயன்படுத்தி பயணம் செய்யும் வசதியை நீங்கள் பெறுவீர்கள்.

2009ம் ஆண்டுக்குள், நீங்கள் எத்தனைமுறை ஒரு சேவையில் இருந்து மற்றொரு சேவைக்கு மாறினாலும், பேருந்து, ரயில் அல்லது இரண்டிலும் நீங்கள் மொத்தமாக எவ்வளவு தூரம் பயணம் செல்கிறீர்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டே உங்கள் கட்டணம் தீர்மானிக்கப்படும்.

## துரிதமான பயணங்கள்

சாலைகளில், பேருந்துகளுக்கு முன்னுரிமை தரப்படும்.

நீங்கள் காத்திருக்கும் மற்றும் பயண நேரத்தையும் குறைத்திட, பேருந்துகள் தடையின்றி செல்வதற்கு வசதியாக இன்னும் அதிகமான முழுநேர பேருந்து தடங்கள் அறிமுகப்படுத்தப்படும்.


ஆனால், பேருந்து தடங்கள் இருந்தும்கூட, சாலை சந்திப்புகளில் இடப்பக்கம் திரும்பும் வாகனங்களால் பேருந்துகள் சில சமயங்களில் மெதுவடைகின்றன.

எனவே 2008 கடைசிக்குள், சில சந்திப்புகளில் இடப்பக்கம் திரும்பும் வாகனங்களுக்குப் பதிலாக பேருந்துகளுக்கு முதலுரிமை தரப்படும்.

அதே நேரத்தில், 2008 கடைசிக்குள், சில பேருந்து நிறுத்தும் இடங்களிலிருந்து வெளியேறும் பேருந்துகளுக்கு வாகனமோட்டிகள் வழிவிட வேண்டும்.

இதன்வழி, இன்று மணிக்கு 16-19 கிலோமீட்டராக இருக்கும் பேருந்துகளின் சராசரி வேகத்தை 2009ம் ஆண்டுக்குள் மணிக்கு 20-25 கிலோமீட்டராக உயர்த்தமுடியும் என்று எதிர்பார்க்கிறோம். இது உங்கள் பயணம் மற்றும் சென்றடையும் நேரத்தையும் துரிதமாக்கும்.

2015ம் ஆண்டுக்குள், உங்களில் இன்னும் அதிகமானோர் ஒரு மணி நேரத்திற்குள் பயணத்தை முடிக்க உதவும் வழிகளை நாங்கள் ஆராய்கிறோம்.






## இன்னும் பல வாழ்க்கைப்பாணி மையங்கள்

இன்னும் பல பேருந்து நிலையங்களும் ரயில் நிலையங்களும் வாழ்க்கைப்பாணி மையங்களாக உருமாற்றப்படும். அங் மோ கியோ மையம், ரா.ஃபிள்ஸ் எக்ஸ்சேஞ்ச், தஞ்சோங் பகார் எம்ஆர்டி நிலையம் போன்றவற்றைப் போல, இவ்விடங்களில் நீங்கள் ரயிலில் ஏறுவதற்கு முன்பாகப் பொருட்கள் வாங்கலாம், உணவருந்தலாம்.

பேருந்து, ரயில் சேவைகளும் கடைகளும் ஒருங்கே அமைந்திருக்கும் இன்னும் பல ஒருங்கிணைக்கப்பட்ட போக்குவரத்து மையங்களையும் நீங்கள் எதிர்பார்க்கலாம். அடுத்த 10 ஆண்டுகளில் பூன் லே (2009), கிளமென்டி (2011), பிடோக், ஜூரோங் ஈஸ்ட், சிராங்கூன், ஜூ கூன், மரீனா சவுத் ஆகிய இடங்களில் இம்மையங்கள் அமையும்.

## மேம்பட்ட தகவல்

நீங்கள் எடுக்கவேண்டிய பேருந்து சேவையை அறிய உதவியாக, தற்போது 4,500 பேருந்து நிறுத்தங்களிலும் பேருந்து சேவை தகவல் சுவரொட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன.

உடனுக்குடன் பேருந்து தகவல் அளிக்கும் சாதனங்களும் ஏற்கனவே ஆர்ச்சர்ட் சாலையிலும் குடியிருப்புப் பேட்டைகளிலும் நிறுவப்பட்டுள்ளன. நகரின் மற்ற பல பகுதிகளிலும் அவை அதிகமாக நிறுவப்படும்.

நீங்கள் வெளியில் இருக்கும்போதுகூட, 2008 ஜூலை முதல் குறுந்தகவல், இணையம் அல்லது நேரடித் தொலைபேசி சேவை ஆகியவற்றின் வழி உடனுக்குடன் பயணத் தகவல்களைப் பெறலாம்.

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நீங்கள் பயணம் செய்யத் திட்டமிட்டால், உங்கள் கணினி அல்லது கையடக்கச் சாதனத்தின்வழி பேருந்து பயணப் பாதைகள், பேருந்து நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள், சேவை வரவு விவரம், முக்கிய இடங்கள் போன்ற தகவல்களைப் பெறலாம்.



## கடுமையான போட்டி

பேருந்து சேவை நடத்தும் நிறுவனங்களைச் சுறுசுறுப்பாகச் செயல்பட வைத்து, தரங்களைத் தொடர்ந்து உயர்த்தச் செய்திடும் நோக்கத்தில், இனி அவர்கள் உங்களுக்குப் போட்டிப் போட்டுக்கொண்டு சேவையாற்றும் நிலையை உருவாக்கியுள்ளோம்.

அவ்வாறு அவர்கள் செய்யத் தவறினால், அவர்களது தவணைக்காலம் முடிந்ததும் அவர்கள் மாற்றப்படலாம்.

உங்களுக்கு மேலும் பல பயண வழிகளை வழங்கிட இன்னும் பல பிரிமியம் பேருந்து சேவைகளும் வழங்கப்படும்.










எதிர்வரும் 2020ம் ஆண்டுக்குள், நீங்கள் நகரில் வேலை செய்தால், வாழ்ந்தால் அல்லது பொழுதைக் கழித்தால், சராசரியாக 400 மீட்டர் தொலைவுக்குள் எம்ஆர்டி நிலையத்தைத் தேடிப்பிடிக்க முடியும்.

இது வெறும் 5 நிமிடம் நடக்கும் தொலைவுதான்!

நகருக்கு அப்பால், தற்போது எம்ஆர்டி ரயில் சேவையாற்றாத சின் மிங், மரீன் பரேடு, துவாஸ் போன்ற இன்னும் பல இடங்களில் இருந்து நகருக்குச் செல்ல விரைவில் துரித ரயில் சேவை கிடைக்கும்.

மேலும் 2020ம் ஆண்டுவரை கிட்டத்தட்ட ஈராண்டுகளுக்கு ஒருமுறை புதிய ரயில் சேவையும் சேர்க்கப்படும். இதன்வழி இன்னும் பல இடங்களில் எம்ஆர்டி ரயில் சேவை வழங்கி, உங்கள் பயண நேரம் குறுகிப்போகும்.



## கட்டப்படும் புதிய ரயில் வழிகள்

மரீனா பேயின் மையத்தில் இருந்து, தாம்சன் லைன் எனும் புதிய எம்ஆர்டி ரயில் சேவை  வடக்கு நோக்கி மத்திய வர்த்தக வட்டாரம், அங் மோ கியோ வழியாக உட்லண்ட்ஸ் வரை செல்லும்.

தற்போது நேரடி எம்ஆர்டி சேவை இல்லாத சின் மிங், கெபுன் பாரு, தாம்சன், கிம் செங் போன்ற பேட்டைகளை அது இணைக்கும்.

மரீனா பேயில் இருந்து, புதிய கிழக்கு வட்டார ரயில் சேவையுடன் தாம்சன் சேவை இணையும்.

கிழக்கு வட்டார ரயில் சேவை தஞ்சோங் ரூ, மரீன் பரேடு, சிக்லாப், பிடோக் சவுத், அப்பர் ஈஸ்ட் கோஸ்ட் ஆகிய பேட்டைகளை கிழக்கிலுள்ள சாங்கியுடன் இணைக்கும்.

தாம்சன் ரயில் சேவை 2018ம் ஆண்டும், கிழக்கு வட்டார சேவை 2020ம் ஆண்டிலும் தயாராகிவிடும்.

இரு சேவைகளும் உங்கள் பயண நேரத்தைக் குறைத்து, பரந்த ரயில் கட்டமைப்புடன் உங்களை இணைக்கும்.

நீங்கள் சின் மிங்கில் குடியிருந்தால், தற்போது நகருக்குச் செல்வதற்கு ஆகும் 45 நிமிட பயண நேரம் கிட்டத்தட்ட பாதியாகிவிடும்.

கிழக்கு வட்டார ரயில் சேவையில் மரீன் பரேடில் இருந்து மரீனா பே செல்ல 20 நிமிடங்கள் ஆகும். இது காரில் செல்வதற்கு நிகரான வேகம்.

* புதிய ரயில் சேவைகளுக்குத் தரப்பட்ட தேதிகள் உத்தேசமானவை மட்டுமே.






## தற்போதைய ரயில் வழிகள் நீட்டிப்பு

வடக்கு-தெற்கு ரயில் சேவை தற்போது மரீனா பே நிலையத்தில் முடிவடைகிறது.

எதிர்வரும் 2015ம் ஆண்டுக்குள், நாங்கள் இதனை 1 கிலோமீட்டர் தெற்குநோக்கி நீட்டிக்கப் போகிறோம். மரீனா சவுத் வட்டாரத்திலுள்ள புதிய உல்லாசக்கப்பல் முனையம் போன்ற மேம்பாடுகளுக்கும் இது சேவையாற்றும்.

அதே சமயத்தில், கிழக்கு-மேற்கு ரயில் சேவை துவாஸ் வரை மேலும் 14 கிலோமீட்டர் நீட்டிக்கப்படும்.

கிளமென்டியில் இருந்து துவாஸ் செல்ல, தற்போது நீங்கள் பூன் லே நிலையத்தில் இறங்கி, பின்பு 35 நிமிட பேருந்து பயணம் செல்ல வேண்டும்.

எதிர்வரும் 2015ம் ஆண்டு நிறைவடையவிருக்கும் துவாஸ் நீட்டிப்புக்குப் பிறகு, உங்கள் பயண நேரம் 20 நிமிடங்கள் குறைந்துவிடும்.




## மிதமிஞ்சிய கூட்டம் குறைக்கப்படும்

2008 பிப்ரவரி முதல், காலை மற்றும் மாலை உச்ச நேரங்களில் வடக்கு-தெற்கு, கிழக்கு-மேற்கு மற்றும் வடகிழக்கு ரயில் சேவைகளில் வாரத்திற்குக் கூடுதலாக 93 ரயில் பயணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

ரயில் பயணங்கள் அதிகரிப்பதால், கூட்டம் குறைவதோடு, உச்ச நேரத்தில் நீங்கள் காத்திருக்கும் நேரமும் 10-15% குறையும்.

அடுத்த நான்கு ஆண்டுகளில், ரயில் சேவைமுறையை மேலும் மேம்படுத்துவோம். இதன்வழி தற்போதைய வடக்கு-தெற்கு மற்றும் கிழக்கு-மேற்கு ரயில் வழிகளில் ரயில்களுக்காகக் காத்திருக்கும் நேரம் மேலும் குறையும்.






## கட்டமைப்பு இரட்டிப்பாகும்

2020ம் ஆண்டில், பூன் லே நீட்டிப்பு, வட்ட (சர்க்கிள்) தடம், டௌன்டவுன் ரயில் தடம், தாம்சன் ரயில் தடம், கிழக்கு வட்டார ரயில் தடம், துவாஸ் நீட்டிப்பு, வடக்கு-தெற்கு சேவை நீட்டிப்பு ஆகிய அனைத்தும் நிறைவடைந்ததும், ரயில் கட்டமைப்பு 138 கிலோமீட்டரில் இருந்து 278 கிலோமீட்டராக இரட்டிப்பாகும்.

இதன்வழி ஒரு மில்லியன் மக்களுக்கு 51 கிலோமீட்டர் ரயில்பாதை என்ற விகிதம் உருவாகி, ஹாங்காங் மற்றும் தோக்கியோவைவிட அதிகமாக இருக்கும்.

## முன்கூட்டியே நிறைவடையும்

நீங்கள் பிடோக் ரிசர்வாயர் அல்லது தெம்பனிஸ் வட்டார குடியிருப்பாளராக இருந்தால், டௌன்டவுன் ரயில் தடம் முடிவடையும் ஆண்டை 2018ல் இருந்து 2016க்கு முன்கொண்டு வருகிறோம் என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

அதேபோல, வட்ட (சர்க்கிள்) தடத்தின் 3ம் கட்டத்தை 2010ம் ஆண்டுக்குப் பதிலாக 2009ம் ஆண்டு மத்தியில் திறக்கப் போகிறோம்.

வட்ட (சர்க்கிள்) தடத்தின் 3ம் கட்டம் வடக்கு-தெற்கு சேவையின் பிஷான் நிலையத்தையும் வடகிழக்கு சேவையின் சிராங்கூன் நிலையத்தையும் இணைக்கும். இதனால் வடக்கிலும், வடகிழக்கிலும் வாழுவோருக்குப் புதிய இணைப்புகள் அதிகரிக்கும்.



## நடைமேடையில் கண்ணாடிக் கதவுகள்

பயணிகளின் பாதுகாப்புக்காக, நடைமேடைகளில் கண்ணாடிக் கதவுகளை நாங்கள் நிறுவப் போகிறோம். 2009ல் ஈசூன், ஜூரோங் ஈஸ்ட், பாசிர் ரிஸ் நிலையங்களில் தொடங்கி, 2012ம் ஆண்டுக்குள் மேம்பாலத் தடத்தில் அமைந்துள்ள அனைத்து எம்ஆர்டி நிலையங்களிலும் கதவுகள் நிறுவப்படும்.

## அதிக போட்டி அறிமுகம்

பேருந்து நிறுவனங்களைப் போலவே, ரயில் நிறுவனங்களும் உங்களுக்குச் சேவையாற்ற போட்டிப் போடவேண்டும்.

அவர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படுவதை உறுதிப்படுத்த, தற்போதைய 30 ஆண்டுகால உரிமம் வருங்காலத்தில் குறுகிய காலத்திற்குக் குறைக்கப்படும்.








பேருந்து, ரயில் சேவைகளில் செய்யப்படும் பற்பல புதிய மேம்பாடுகளால், அதிகமானோர் பொது போக்குவரத்தைப் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஆனால் நீங்கள் வாகனம் ஓட்டிச்செல்ல விரும்பினால், உங்கள் பயணம் சரளமாகவும் துரிதமாகவும் அமைய நாங்கள் முயற்சிகள் எடுக்கிறோம்.

## புதிய விரைவுச்சாலைகள்


காலாங்-பாய லேபார் விரைவுச்சாலை 2008 செப்டம்பரில் முழுமையாகத் திறக்கப்படும்.

நீங்கள் வடகிழக்கில் குடியிருந்தால், நகருக்குச் செல்லும் பயண நேரம் 25% வரை குறையும்.

இதற்கிடையே, மரீனா கோஸ்டல் விரைவுச்சாலை 2013ம் ஆண்டிலும், வடக்கு-தெற்கு விரைவுச்சாலை 2020ம் ஆண்டிலும் முடிவடையவிருக்கின்றன. வடக்கிலிருந்து நகருக்குச் செல்லும் பயண நேரத்தை இவை கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி குறைத்துவிடும்.

## அகலமான விரைவுச்சாலைகள்

போக்குவரத்தைச் சரளப்படுத்த, மத்திய விரைவுச்சாலையையும் தெம்பனிஸ் விரைவுச்சாலையையும் நாங்கள் அகலமாக்குவோம்.




## மின்னியல் சாலைக் கட்டணம் மேம்பாடு

அதிகமான, அகலமான சாலைகளால் போக்குவரத்து சரளமாகிவிடும் என்பதற்கு உத்தரவாதமில்லை.

ஏனெனில் கூடுதல் தடங்களும் புதிய சாலைகளும் அதிகமான போக்குவரத்தை ஈர்த்து, விரைவில் நெரிசல் மீண்டும் தலையெடுக்கும்.

சென்ற ஆண்டு அமெரிக்க வாகனமோட்டிகள் கிட்டத்தட்ட 4.2 பில்லியன் மணிநேரம் நெரிசலில் சிக்கித் தவித்தனர். இந்த நேரத்தில் 65 மில்லியன் iPod Nano சாதனங்களில் இசை பதிவு செய்துவிடலாம். நெரிசலில் விரயமான எரிபொருள் 58 சூப்பர்டாங்கர்களை நிரப்பிவிடும்.

இந்நிலை சிங்கப்பூரில் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை.

அதனால்தான் இஆர்பி எனும் மின்னியல் சாலைக் கட்டணத்தின்வழி போக்குவரத்தைக் கட்டுப்படுத்துகிறோம்.

உச்ச நேரத்தில் நெரிசலான சாலையில் செல்ல நீங்கள் தீர்மானித்தால், “உபயோகத்திற்கு ஏற்ப கட்டணம்” கட்டும் இஆர்பி முறை நியாயமானது.

கார் வைத்திருக்கும் சிங்கப்பூரர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போவதால், அவர்கள் அனைவரும் தங்கள் கார்களை எந்நேரமும், வேலைக்கும் வீட்டுக்கும் ஓட்டிச் செல்வது நிச்சயமாகச் சாத்தியமில்லை.

அதனால்தான் நமது பொது போக்குவரத்தை மேம்படுத்துகிறோம். வாகனம் ஓட்டுவதற்குப் பதிலாகப் பேருந்து அல்லது ரயிலில் செல்லுமாறு சிங்கப்பூரர்களை ஊக்குவிப்பது இதன் நோக்கம்.






சாலைகளில் கார்களின் எண்ணிக்கை அதிகரிக்க, அதே அளவுக்கு இஆர்பி அமலாக்கமும் மேலும் விரிவடையும். சரளமான போக்குவரத்தையும் தரமான வாழ்க்கைச் சூழலையும் கட்டிக்காக்க நாங்கள் கட்டணம் விதிக்கிறோம்.

2008 ஜூலை முதல், நகர்ப்பகுதியில் இன்னும் பல கட்டண நுழைவாயில்கள் நிறுவப்படும். தொடக்கமாக, மத்திய வர்த்தக வட்டாரத்தில் போக்குவரத்தைக் குறைக்க கூடுதல் நுழைவாயில்கள் நிறுவப்படும்.

இஆர்பி கட்டணங்கள் 50 காசுக்குப் பதிலாக $1 வீதம் திருத்தப்படும். புதிய கட்டண நுழைவாயில்களில் ஆரம்பக் கட்டணம் $1ல் இருந்து $2 ஆக உயரும்.

இந்த மாற்றங்கள் இஆர்பி கட்டண முறையின் செயலாற்றலை மேம்படுத்தும். நீங்கள் வாகனம் ஓட்டுவதாக இருந்தால், கட்டணம் திருத்தப்படும் ஒவ்வொரு முறையும் போக்குவரத்தின் சரளத்தில் மாற்றத்தைக் காண்பீர்கள்.




## குறைவான வரி

உபயோகக் கட்டணங்களை நாம் அதிகமாகச் சார்ந்திருப்பதால், வாகன உரிமை வரிகளை நாங்கள் குறைப்போம்.

2008 மார்ச் முதல், கார்களுக்கான கூடுதல் பதிவுக் கட்டணம் (ARF) பொதுச் சந்தை மதிப்பில் (OMV) 100% ஆகக் குறைக்கப்பட்டது.

2008 ஜூலை முதல், டாக்சிகள் உட்பட அனைத்து வாகனங்களுக்கும் சாலை வரியை 15% குறைக்கிறோம்.

மொத்தத்தில், இந்தக் குறைப்புகளால் அரசாங்கத்திற்கு ஆண்டுக்குச் சுமார் $310 மில்லியன் செலவாகும். ஆண்டுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் இஆர்பி கட்டண வருமானமான $70 மில்லியனைவிட இது அதிகம்.

நெரிசலைத் தீர்க்கவே இஆர்பி கட்டணங்கள் அதிகமாக இருக்கின்றன என்றும் வருமானத்தைப் பெருக்குவதற்காக அல்ல என்றும் இது புலப்படுத்துகிறது.

## மெதுவான வளர்ச்சி

அடுத்த 10 முதல் 15 ஆண்டுகளில் சாலை வளர்ச்சி ஆண்டுக்கு 0.5% ஆக மெதுவடையும் என எதிர்பார்க்கப்படுவதால், வாகன எண்ணிக்கையின் தற்போதைய 3% வளர்ச்சியை நாம் தொடரமுடியாது.

2009 மே முதல், தற்போதைய 3%க்குப் பதிலாக வாகனங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 1.5% வளர்ச்சியடைய அனுமதிக்கப்படும். வாகன எண்ணிக்கையின் வளர்ச்சி சாலை வளர்ச்சியை மிஞ்சிவிடாதிருப்பதை உறுதிப்படுத்த மூன்று ஆண்டுகளில் இந்த இலக்கைப் பரிசீலனை செய்வோம்.






கடுமையான கார் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பிற்காலத்திற்கு ஒத்திப்போடலாம் என சிலர் பரிந்துரைக்கின்றனர்.

பிரச்னையைத் தீர்க்க அதிக சாலைகள் கட்டலாம் என்பது அவர்கள் கூறும் காரணம்.

ஆனால் அப்படி செய்ய முடியாது.

நாங்கள் அதிக சாலைகள் கட்டி, உங்களில் சிலர் பொது போக்குவரத்தை அதிகமாகப் பயன்படுத்தினாலும், சரளமான போக்குவரத்தால் ஈர்க்கப்படும் மற்றவர்கள் உங்கள் இடத்தை நிரப்பிவிடுவார்கள்.

கூடிய விரைவில், இச்சாலைகளில் மீண்டும் நெரிசல் தலைகாட்டும்.


அதனால்தான் மிதமிஞ்சிய கார் உபயோகத்தையும் நாங்கள் கட்டுப்படுத்துவது அவசியமாகிறது.

ஆனால் அதே வேளையில் பொது போக்குவரத்தை மேம்படுத்தி உங்களுக்கு மாற்று வாய்ப்புகள் இருப்பதை உறுதிப்படுத்த முழுமுயற்சி எடுப்போம்.




நமது பேருந்து, ரயில் சேவைகளை மேம்படுத்துகையில், வயதான பயணிகள், சிறு பிள்ளைகள் கொண்ட குடும்பங்கள், உடற்குறையுள்ளவர்கள், ஏழைகள் உட்பட அனைவரும் இச்சேவைகளைப் பயன்படுத்த முடிவதையும் நாங்கள் உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

பலதரப்பட்ட தேவைகளை நிறைவேற்றி, அனைவருக்கும் போக்குவரத்து கிடைக்கச்செய்வது எப்படி?




அதிகமான இணைப்புப் பாதைகளிலும் மேம்பாலங்களிலும் கூரைகள் அமைத்து, நீங்கள் பேருந்து நிறுத்தத்திற்கும் எம்ஆர்டி நிலையத்திற்கும் சொகுசாக நடந்து செல்ல வழியமைப்போம்.

பாதசாரி நடைபாதைகள், எம்ஆர்டி நுழைவுப் பாதைகள், டாக்சி மற்றும் பேருந்து நிறுத்தங்கள், பொதுச் சாலைகள் போன்ற வசதிகள் தடையற்றவையாக மாற்றப்படும்.

பாதசாரி சாலை கடப்புகளில் பார்வையில்லாதவர்களுக்காக தொட்டுணரக்கூடிய வழிகாட்டிகள் அமைக்கப்படும்.






எதிர்வரும் 2011ம் ஆண்டுக்குள், பத்தில் ஏழு எம்ஆர்டி ரயில் நிலையங்களில் மின்தூக்கிகளும் இரண்டு தடையற்ற நுழைவாயில்களும் இருக்கும்.

மேலும் 2020ம் ஆண்டுக்குள், அனைத்து பொது பேருந்துகளிலும் சக்கரநாற்காலியில் செல்லலாம்.




பல்வேறு அரசாங்க, சமூக உதவித் திட்டங்களின்வழி நேரடி உதவி வழங்கி, வசதி குறைந்தோருக்கு பொது போக்குவரத்து சேவை கிட்டுவதைத் தொடர்ந்து உறுதிப்படுத்துவோம்.






## டாக்சி பயணிகளுக்காக

சொகுசாகப் பயணம் செல்ல விரும்பும் பயணிகளுக்காக வாசலில் இருந்து வாசல் வரை டாக்சிகள் சேவை வழங்கும்.

2008 ஜூலை முதல் டாக்சிகளை அழைப்பதற்கான பொது தொலைபேசி எண்ணும் அறிமுகமாகும்.



## சைக்கிளோட்டிகளுக்காக



சைக்கிள் பயணத்தில் ஆர்வம் அதிகரித்து வருவதை நாங்கள் கவனிக்கிறோம்.


எனவே குடியிருப்புப் பேட்டைகளின் எம்ஆர்டி நிலையங்களிலும் பேருந்து நிலையங்களிலும் சைக்கிள் நிறுத்திவைக்க கூடுதல் வசதிகளைச் சேர்ப்போம்.

2008 மார்ச் முதல், 6 மாத முன்னோட்டக் காலத்திற்கு, மடக்கக்கூடிய சைக்கிள்களை சைக்கிளோட்டிகள் ரயில்களிலும் பேருந்துகளிலும் எடுத்துச்செல்ல அனுமதிப்போம்.

வெஸ்ட் கோஸ்ட், தாம்சன் போன்ற அதிகமாகப் பயன்படுத்தப்படும் சைக்கிளோட்டப் பாதைகளில், சைக்கிளோட்டிகளைக் கவனிக்குமாறு வாகனமோட்டிகளை எச்சரிக்கும் பாதுகாப்பு அறிவிப்புகளையும் நிறுவுவோம்.









ரயில்கள், பேருந்துகள் மற்றும் மோட்டார் அல்லாத போக்குவரத்தாகிய சைக்கிள்கள் ஆகியவற்றை அதிகமாகப் பயன்படுத்தி, காற்றுத் தூய்மைக்கேட்டைக் குறைக்க நாம் உதவலாம்.

வாகனங்கள் கக்கும் புகையால் நமது நகரம் மூச்சுத்திணறாமல் தடுத்திட நாம் அனைவரும் நமது பங்கை ஆற்றுவது முக்கியம்.

அதனால்தான் 2014ம் ஆண்டுக்குள், அனைத்து டாக்சிகளும் மேலும் கடுமையான Euro IV புகை கட்டுப்பாட்டு அளவுக்கு உட்படவேண்டும்.

பொது பேருந்துகளில் சுமார் 40% பேருந்துகள் 2010ம் ஆண்டுக்குள் இந்த இலக்கை எட்டிவிடும். 2020ம் ஆண்டுக்குள் 100% பேருந்துகளும் இலக்கை அடைந்துவிடும்.

மேலும், எரிசக்தியைச் சிக்கனப்படுத்தும் வாகனங்களையும் CNG (இயற்கை எரிவாயு) போன்ற தூய்மையான எரிபொருட்களையும் நாங்கள் தொடர்ந்து ஊக்குவிப்போம்.



# வருங்காலம்







இந்த யோசனைகளில் பலவும் உங்களைப் போன்ற பயணிகளிடமிருந்து வந்தன – தங்கள் கருத்துகளை மின்னஞ்சல், வலைப்பதிவு, கடிதங்கள், கலந்துரையாடல்கள் போன்றவற்றின்வழி எங்களுடன் பகிர்ந்து கொள்ள நேரம் ஒதுக்கியவர்கள்.

நாங்கள் உங்களைத் தொடர்ந்து ஈடுபடுத்த விரும்புகிறோம் என்பதை நீங்கள் அறியவேண்டும் என நினைக்கிறோம். எனவே உங்களது மாறிவரும் பயணத் தேவைகள், விருப்பங்கள், சிறந்த நலன்கள் ஆகியவற்றுடன் நாங்கள் எப்போதுமே தொடர்பில் இருப்போம்.

உங்கள் கருத்துகளைத் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம். ஒன்றுசேர்ந்து, அனைவரும் அனுபவிக்கக்கூடிய தரமான வாழ்க்கைச் சூழலை நிலைநாட்டுவோம்.

தயங்காமல் feedback@lta.gov.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள் அல்லது 1800 – CALL LTA (1800-2255582) அழையுங்கள்.




An Epigram Design & Production • Illustrations by Koh Kai Chuan




Land Transport Authority
1 Hampshire Road Singapore 219428
Tel: 1800-CALL LTA (1800-2255 582)
Fax: (65) 6396 1002

மே மாதம் 2008ல் மீண்டும் அச்சடிக்கப்பட்டது